But what pertains to the City theatres pertains to the mofussal theatres also. If the rules are not being strictly observed, I will see to it that they are observed.

கதர், கைத்தறித் துறைகள்

* 42 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கதர்–கைத்தறி இலாகா இவற்றின் பணிகளை ஒருமுகப் படுத்தி சீராக்குவது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத் தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்வி எழ இடமில்லை.

Dr. H. V. HANDE : Is the Minister aware that in the part few years the quality of Khadi has gone down so much that it warrants some immediate inspection as to what exactly is the reason for the decline in the quality of Khadi?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கதர்த் துணிகளின் தரம் நாளுக்கு நாள் குறைந்துவருவதாக உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டார்கள். கதர்த் துணியின் உற்பத்திச் செலவு மிக அதிகமாக ஆவதாலும், அந்தத் துணியை நெய்பவர்கள் ஊடுக்கும், பாவுக்கும் வெவ்வேறு நூலை உபயோகப்படுத்துவதாகப் புகார்கள் வந்திருக் கின்றன. அவைகளைப்பற்றியெல்லாம் அரசு சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதில் என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி விரைவிலே முடிவு எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழகத்தைப் பொறுத்தவரை யிலே, கைத்தறி நெசவாளர்களின் நிலைமை மிகவும் நசித்து வருகிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கைத்தறித் துணிக்கும், கதர்த் துணிக்கும் தொடர்பு இல்லை என்பதை உறுப்பினர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : அரசு ஊழியர்களை, குறிப்பாக ஊராட்சி ஒன்றிப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தி கதர்த் துணி விற்கும் முறையை அரசு கைவிடுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக்கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1967 ஜூன் 20]

THIRU K. VINAYAKAM: What is the view of this Government as far as the Khadar problem is concerned? Does this Government continue to have confidence in it and will it continue to give sufficient aid that has been given to it by the former Government?

THE HON. THIRU C. N. ANNADURAI: To be very plain, this Government's view is that Khadar is a political badge and an economic impossibility.

THIRU K. VINAYAKAM: My question has not been answered. Does the Government propose to give to it the support which the former Governments had been giving?

THE HON. THIRU C. N. ANNADURAI: The latter part of the answer is that it is an economic impossibility which means that this Government should not be expected to encourage and maintain an economic impossibility. But due to political courtesy we are carrying it on, as it was carried on before.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்: ஐயா, இப்பொழுது இரண்டு மாத காலத்திற்கு முன்னால் கூட ஊராட்சி ஒன்றியப் மன்ற சிப்பந்திகள் கட்டாயமாக ரூ. 50-க்கு கதர் வாங்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரியுமா? முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபோன்ற குற்றச் சாட்டுக்கள் வந்ததால் தான் அப்படிப்பட்ட கட்டாயங்கள் திணிக் கப்படக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவு அடைந்தன.

குறிப்பு :—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) 'குறிஞ்சி' இதழில் வெளிவந்த கட்டுரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை முறையில் குற்றச் சாட்டுக்கள் இரண்டு மூன்று உள்ளன. முதல் பிரச்சினை, மாண்பு மிகு உறுப்பினர் திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத் திருப்பது அவர்கள் ஒரு பத்திரிகைமீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த இதழைப் பார்த்த பிறகு, அந்தக் கட்டுரையைப் படித்த பிறகு, மாண்புமிகு உறுப் பினருடைய குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும், ஒரு செய்தித்தாளின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தோன்றும்போது, எழுத்து உரிமை, கருத்து உரிமை, செயல் உரிமை போன்ற பற்பலவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவை எனக்குத் தெரிந்த போதிலும், அப்படி அவற்றைக் கணக்கில் எடுத்துப் பார்த்த